IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.56/2018
DEPOSITION OF WITNESS

வா.சா. 1 சாட்சி தவசி த.பெ.மாயாண்டித்தேவர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additioanl District Munsif on 15.4.2026 in accordance with the provisions of Act XX141.**

1,2,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1. கழுவாயி என்பவரின் பூர்வீகச் சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பொதுச்சொத்தான பூர்வீகச் சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கழுவாயி அம்மாளுக்கு கழுவன், பேச்சியம்மாள், மொக்கராஜ், பஞ்சவர்ணம் ஆகியோர் பிள்ளைகள் ஆவார்கள் என்றால் சரிதான். மேற்படி மொக்கராஜின் மனைவி பசுபதி என்றால் சரிதான், அவருக்கு வாரிசு இல்லை. மேற்படி பசுபதி எங்குள்ளார் என்றால் விக்கிரமங்கலத்தில் உள்ளார்.

2. மேற்படி மொக்கராஜ் மனைவி பசுபதியை இந்த வழக்கில் தரப்பிரனாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கானது அவசிய தரப்பினரை சேர்க்கவேண்டிய தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2வது இலக்கச் சொத்தின் கதவு எண்.390/2/314 கொண்ட ஓட்டுவீடு என்றால் சரிதான். மேற்படி வீட்டில் தற்போது யார் குடியுள்ளார் என்றால் கருப்பாயி என்பவர் குடியுள்ளார்.

3. மேற்படி கருப்பாயி யார் என்றால் சாத்தங்குடி கிராமத்தைச் சேர்ந்தவர், வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை. வா.சா.ஆ.5 ஆவணம் கழுவத்தேவர் மகன் விருமாண்டி பெயரில் உள்ளது என்றால்

சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 5 ஆவணங்களிலும் 2வது இலக்கச் சொத்தான வீடு பூர்வீக பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், மேற்படி வீட்டிற்கு ஆவணம் கிடையாது.

4. 1வது இலக்கச் சொத்தை கழுவாயி உயிருடன் இருக்கும்போதே கிரையம் செய்து கொடுத்து விட்டார் என்றாலும், அதில் பாகம் கோருவதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.16 10:04:03 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.